செ.வெ.எண்:01 நாள்:01.04.2017

**கரூர் மாவட்டத்தில் 78,571 குடும்ப அட்டைகளுக்கு பதிலாக மின்னணு ஸ்மார்ட் கார்டுகளாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் இன்று தாந்தோன்றிமலையில் வழங்கி தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் குடும்ப அட்டைகளை மின்னணு ஸ்மார்ட் கார்டுகளாக வழங்கும் பணியினை திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று (01.04.2017) தொடங்கி வைத்ததை தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் தாந்தோன்றிமலை, பகவதி அம்மன் கோயில் அருகிலுள்ள நியாயவிலைக்கடையில் மாவட்ட ஆட்சியர் திரு.கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப.,அவர்கள் மின்னணு ஸ்மார்ட் கார்டுகளை வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டத்தில், 377 முழு நேர நியாயவிலை அங்காடிகளும், 206 பகுதிநேர அங்காடிகளும் என 583 நியாயவிலை அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த கடைகள் மூலம் 269473 குடும்ப அட்டைதாரர்களுக்கு ஸ்மார்ட் கார்டுகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த குடும்ப அட்டைதாரர்களிடம் ஆதார் எண், கைபேசி எண் பதிவு செய்யப்பட்டு முதல்கட்டமாக கரூர் வட்டத்திற்கு 18,363, அரவக்குறிச்சி வட்டத்திற்கு 18,354, மண்மங்கலம் வட்டத்திற்கு 8475, கிருஷ்ணராயபுரம் வட்டத்திற்கு 11,431, குளித்தலை வட்டத்திற்கு 14,703, கடவூர் வட்டத்திற்கு 7,245 என மொத்தம் 78,571 நபர்களுக்கு இன்று (01.04.2017) முதல் மின்னணு குடும்ப அட்டை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரரின் கைபேசியில் 8 இலக்க எண்கள் கொண்ட கடவுச்சொல் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். மேற்படி குறுஞ்செய்தி வரப்பெற்றுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கைபேசி, ஆதார்அட்டை நகல் மற்றும் பழைய குடும்ப அட்டைகளை சம்பந்தப்பட்ட நியாயவிலை அங்காடிகளுக்கு எடுத்துச்சென்று மின்னணு குடும்ப அட்டைகளை பெற்றுக் கொள்ளலாம். மேலும், அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் படிப்படியாக மின்னணு குடும்ப அட்டை வழங்கப்படும்.

தற்பொழுது வழங்கப்பட்டுள்ள மின்னணு குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் புதிய மின்னணு அட்டை கோரி மனு செய்தல் ஆகிய சேவைகளை பெற பொதுமக்கள் tnpds.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பித்து சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களிலுள்ள இ-பொது சேவை மையங்கள் மூலம் பயன்பெறலாம். இப்பணிகளை சிறப்பாக செய்வதற்காக சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு உரிய முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் இத்திட்டத்தை முறையாக பயன்படுத்திக் கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.சீனிவாசன், நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் திரு.பாபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.அசோகன், வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில், பொதுவிநியோகத்திட்ட துணை பதிவாளர் திரு.லோகநாதன், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.துரைமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர்.**